### கழகத் தலைவர் தலைமையில் – இன்று

# தொகுதிப் பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் !

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், 2026 - சட்டமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நியமனம் செய்யப் பட்டுள்ள **"சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்"** இன்று (28.10.2024 - திங்கட்கிழமை) காலை 11.00 மணி யளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கத்தில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மேயர் பிரியாராஜன் ஆகியோர் முன்னிலையில், சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளின் பாகநிலை முகவர்கள் (BLA2) 1400 நபர்களுக்கு இந்துசமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு புத்தாடைகள் மற்றும் பரிசு பொருட்கள் வழங்கி சிறப்பித்தார்.

### மயிலாடுதுறை மாவட்டம் – பெருஞ்சேரி, சுந்தரப்பன்சாவடி அருகில் நிகழ்ந்த

# சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 28 -

சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்திற்கு நிதியுதவி அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம், பாகசாலை காவல் நிலையத்திலிருந்து அயல் பணியாக மயிலாடுதுறை மாவட்ட காவலர் பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்து வந்த காவலர் பரந்தாமன் (வயது 39) த/பெ.கண்ணன் என்பவர் நேற்று (27.10.2024) பிற்பகல் சுமார் 2.00 மணியளவில் பணி முடிந்து இருசக்கர வாகனத்தில் பெரம்பூர் காவல் சரகம், பெருஞ்சேரி, சுந்தரப்பன்சாவடி அருகில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த அரசுப் பேருந்து எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காவலர் பரந்தாமன் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவலர் திரு.பரந்தாமன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் – மீஞ்சூர் கே.பாஸ்கர் சுந்தரம் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், அக். 28-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு உறுப்பினர் கூட்டம் இன்று (28.10.2024 - திங்கட்கிழமை) காலை 9.30 மணி அளவில் படப்பை சி.என்.சி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் மு.சுப்பிர மணி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குரு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீஞ்சூர் கே.பாஸ்கர் சுந்தரம் ஆகியோர் சிறப்புரை யாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய நிர்வாகிகள் வ.நந்தகோபால், ஏ.மணி வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, வி.ஹரி, மு.ராஜேந்திரன், மா.பரிமளாழகன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், சங்கீதா வேலு, பொன். ரமேஷ்கவி, எஸ்.கர்ணன், மலர்விழி தமிழ் அமுதன், கு. ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், ச. பாலகிருஷ்ணன், ஜி.ஏ. ராயப்பன், எஸ்.வைரம், தினேஷ் கந்தசாமி, ம.ரேவதி, கே.எம்.சி சத்தியமூர்த்தி, வி. எஸ். கோதண்டராமன், என். எஸ். இளங்கோ, இளைஞர் அணி, ப.அறிவொளி, க.பா.ஆடலரசு, ரா. தீபக், மா.சே. பிரகாஷ்,லோ, சுதாகர், மாணவர் அணி, அ.ஜமீர், இரா.குமரவேல், செ. பார்த்திபன், பொன். இளைய பாரதி, ஆர். சையத்ரமீஸ், இ.பாலாஜி, மகளிர் அணி.மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், விவசாய அணி, ஜி. இருசப்பன், விவசாய தொழிலாளர் அணி, ஏ.இ. பரசுராமன், ம. அசோக்குமார்,ஏ.இ. பஞ்சாட்சரம், வழக்கறிஞர் அணி, ப. வேல்முருகன், ச.ரஞ்சித் குமார், இரா. சந்திரசேகர், தகவல் தொழில் நுட்ப அணி, மூ.குமார்,வ. வீரபாண்டியன், ர.தமி ழ்தாசன், கா. யுவராணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சொற்போர் வீரர்களை

# வாழ்த்தி வரவேற்கிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, அக்.28-

"கருத்தியல் சொற்போர் வீரர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நேற்று (27.10.2024) கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"களப்போரில் துணைநிற்கவுள்ள கருத்தியல் சொற்போர் வீரர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

# 6 தொகுதிகளின் பாக முகவர்களுக்கு பரிசுப் பொருட்கள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்

சென்னை, அக். 28 -

பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு, சென்னை, பாரிமுனை, அரண்மனைக்காரத் தெருவில் உள்ள பின்னிமில் கார்பார்க்கிங் வளாகத்தில் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி அளவில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் சென்னை மாநகர மேயர். பிரியாராஜன் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற விழாவில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு. வி.க.நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளின் பாக நிலை முகவர்கள் (BLA2) 1400 நபர்களுக்கு, சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்துசமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு புத்தாடைகள் மற்றும் பரிசு பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் டாக்டர். கலாநிதி வீராசாமி. எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம் கவி. எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல். எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், பி.கே .மூர்த்தி. எம்.சி, கே.சந்துரு, கே.எஸ். எம். நாதன், எம்.விஜயகுமார், சி.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்: கே .எஸ். ரவிச்சந்திரன், எஸ். மணிமுடி, சங்கரி நாராயணன். மாநில நிர்வாகிகள்: தமிழன் பிரசன்னா, .உமா காந்த், என்.பி.எம் .ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, எம்.சி., கவிஞர் நன்மாறன், வரதன், மண்டலகுழு தலைவர் (ம) நிலைக்குழு தலைவர்கள்: ப.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ் குமார்,எம்.சி, கூ.பி. ஜெயின். எம்.சி, ஜி.சாந்தகுமாரி, எம்.சி, சொ. வேலு. எம்.சி, மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகா தேவன், புனிதவதி எத்திராசன்.எம். சி. இசட். ஆசாத். எம்.சி.

சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர்கள்: வழக்கறிஞர் இரா. விடுதலை கொளத்தூர் தொகுதி பொறுப்பாளர், இரா. நரேந்திரன் - துறைமுகம் தொகுதி பொறுப்பாளர், ஓ.ஏ.நாகலிங்கம் - வில்லிவாக்கம் தொகுதி பொறுப்பாளர், டாக்டர் ப.மீ.யாழினி - எழும்பூர் தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி- திரு.வி.க.நகர் தொகுதி பொறுப்பாளர், பி. முனியாண்டி - அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர்.

பகுதிசெயலாளர்கள்: எஸ்.ராஜசேகர்,எஸ்.முரளி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், ஏ. நாகராசன்.எம்.சி., டி.எஸ். பி.ராஜகோபால். எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக் கண்ணு, வே.வாசு, வி.சுதாகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எம்.இப்ராஹிம் கனி, டாக்டர். ஏ.பி. பூர்ணிமா, எம்.சி. இரா.கலைச்செல்வி, டி.போஸ். மாவட்டஅணிகளின் அமைப்பாளர்கள்: பி.ஜெகதீஷ், வானவில் விஜய், சுதா தீனதயாளன் எம்.சி, ஜி.தாமோதரன், துரைகண்ணன், எம். பெரோஸ்கான், LPF. மோகன், பி.விஜயகுமார், M.விநாயகம், ராஜேஸ்வரி ஸ்ரீதர்,எம்.சி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் எம்.சி., ஆர்.எஸ்.சித்திக்,

இரா.வீரமணி, கு.கிருஷ்ண மூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து. ஆயிரம், ஜி.பி.பிரதீப்குமார், ம.அசோக்குமார் மற்றும் வட்டகழச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

# 6 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெறும் கலந்தாலோசனை கூட்டங்களின் விவரம்!



## மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

| நாள் /நேரம் | சட்டமன்ற தொகுதி | இடம் | சிறப்புரை | தலைமை/ முன்னிலை |
|---|---|---|---|---|
| 02.11.2024 (சனிக்கிழமை) மாலை 4.00 மணி | அம்பத்தூர் | மோகன் கார்டன் திருமணமண்டபம், பாடி, கொரட்டூர் | பி.முனியாண்டி அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர். | தலைமை ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் முன்னிலை D.S.P.ராஜகோபால் எம்.சி. அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் MTR.நாகராஜ் அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் |
| 03.11.2024 (ஞாயிறு) காலை 10.00 மணி | எழும்பூர் | சமூகநலக்கூடம் கொசப்பேட்டை | பி.எம்.யாழினி எழும்பூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் | தலைமை சொ.வேலு எம்.சி எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் முன்னிலை வி.சுதாகர் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் |
| 03.11.2024 (ஞாயிறு) காலை 11.00 மணி | துறைமுகம் | கன்னிகா பரமேஸ்வரி திருமண மண்டபம் கொத்தவால்சாவடி | இரா. நரேந்திரன் துறைமுகம் சட்டமன்ற பொறுப்பாளர் | தலைமை எஸ்.முரளி துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் முன்னிலை எஸ்.இராஜசேகர் துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் |
| 05.11.2024 (செவ்வாய்கிழமை) காலை 10.00 மணி | வில்லிவாக்கம் | T.K.A. திருமண மண்டபம், வில்லிவாக்கம் | ஓ.ஏ.நாகலிங்கம் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் | தலைமை கூ.பி.ஜெயின் எம்.சி. வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளர் முன்னிலை வே.வாசு வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் |
| 05.11.2024 (செவ்வாய்கிழமை) மாலை 4.00 மணி | திரு.வி.க.நகர் | சமூக நலக்கூடம் வெங்கடாத்திரி தெரு, குயப்பேட்டை | என்.கிருஷ்ணமூர்த்தி- திரு.வி.க.நகர் தொகுதி பொறுப்பாளர், | தலைமை எம்.சாமிகண்ணு திரு.வி.க.நகர் தெற்கு பகுதி செயலாளர் முன்னிலை செ.தமிழ்வேந்தன் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர் |
| 05.11.2024 (செவ்வாய்கிழமை) மாலை 6.00 மணி | கொளத்தூர் | திருவள்ளுவர் திருமண மண்டபம், பெரியார் நகர் கொளத்தூர். | இரா. விடுதலை கொளத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் | தலைமை ஐ.சி.எப்.வ.முரளிதரன் கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் முன்னிலை A.நாகராஜன் எம்.சி. கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர் |

மேற்கண்ட கலந்தாலோசனைக்கூட்டத்தில் அந்தந்த தொகுதிகளுக்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு எம்.பி, தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: பா.தாயகம் கவி, அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், பா. ரங்கநாதன் Ex.MLA, மண்டகுழு தலைவர்கள்: பி.கே.மூர்த்தி, பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், மற்றும் மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள் (BLA2) கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் ஆவடி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் பங்கேற்கும் பாக முகவர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பாக முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனை வழங்கினார். உடன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், காஞ்சனா சுதாகர், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் பேபி சேகர், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், என்.இ.கே.மூர்த்தி, டி.தேசிங்கு, உள்பட பலர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பாகம் முகவர்கள் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் முன்னிலையில் உத்திரமேரூர் ஒன்றியம் கம்மாளம்பூண்டி ஊராட்சி அ.தி.மு.க.வைச் சேர்ந்த சரவணன், கஜபதி, ஜனார்த்தனன், நாகரத்தினம், சரவணன், அய்யனார் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன், கழகத்தின் மூத்த நிர்வாகிகள் உடன் இருந்தனர்.